வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 07.12.2024 சனிக்கிழமை இதழ் : 341 பக்கங்கள் : 12




## மனித உரிமை மீறல் குற்றவாளிகளுக்கு எதிராக தடை கோரும் யஸ்மின் சூகா!




கொழும்பு, டிசெ. 07

இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான மீறல் குற்றங்களிலும், ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிராக தடைகளையும், நுழைவு அனுமதித் தடையையும் விதிக்குமாறு வலியுறுத்தி அதனுடன் தொடர்புடைய 60 இற்கும் மேற்பட்ட

11

## இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் துயிலும் இல்லங்களை விடுவிக்குக!

### அரசிடம் கோரினார் சத்தியலிங்கம் எம்.பி.

கொழும்பு, டிசெ. 07

இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்படவேண்டும் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் நேற்று சபையில் கோரிக்கை விடுத் தார்.

வவுனியாவில் உள்ள மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படவேண்டும் எனவும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

# நாணய நிதிய இணக்கப்பாடு மீள திருத்தியமைக்கப்படாது!

### அரசாங்கம் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 07

**சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளை மீண்டும் திருத்தியமைக்க முடியாது. அதில் காலதாமதங்களை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை சவாலுக்கு உட்படுத்த முடியாதென வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**



இடைக்கால கணக்கறிக்கை மீது நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமக்கு பாரிய பொறுப்பொன்று சுமத்தப்பட்டுள்ளது. அதனை முழுமையாக பின்பற்ற அனைவரும் பிணைக்கப்பட்டுள்ளோம். நாங்கள் நீண்டகாலத் திட்டங்களை செயல்படுத்த உள்ளோம். அதற்காக ஒரு சிறந்த பொறிமுறையை கையாள வேண்டும். அதற்காகதான் பாராளுமன்றத்தில் குறுகியகால தீர்மானங்கள் சில எடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாகத்தான் இடைக்கால கணக்கறிக்கையொன்றை முன்வைத்துள்ளோம். இதில் நீண்டகால இலக்குகள் இல்லை. இடைக்கால

11

## இடைக்காலக் கணக்கு அறிக்கை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

கொழும்பு, டிசெ. 07

2025 ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான அரசாங்கத்தின் இடைக்கால கணக்கு வாக்கெடுப்பு குறித்த தீர்மானம் பாராளுமன்றத்தில் நேற்று வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

2025 வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கான அரசாங்கத்தின் பணிகள் மற்றும் கடன் சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான அரசாங்கத்தின் இடைக்கால கணக்கு வாக்கெடுப்பு

11

## ஆற்றில் மீன்பிடித்த நபர் சடலமாக மீட்பு

### வவுனியாவில் சோகம்

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 07

வவுனியா பேராறுநீர்த்தேக்கத்தின் வான் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

நேற்று மாலை பேராறுநீர்த்தேக்கத்தின் வான் பகுதியில் நபர் ஒருவர் மீன்பிடித்துக்

11

## 2025 இல் மாணவர்களுக்கு தைக்கப்பட்ட சீருடைகள்!

கொழும்பு, டிசெ. 07

அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்களுக்குத் தைக்கப்பட்ட சீருடைகளை வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முனைவு அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை சீருடைக்கான துணிகளை

11

## சிறுபான்மையின கருத்துகளை உள்வாங்கும் வகையில் சமாதான, நல்லிணக்க முயற்சியை வலுப்படுத்துங்கள்!

### பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு அரசுக்கு பரிந்துரை

கொழும்பு, டிசெ. 07

எதிர்கால மோதல்களைத் தவிர்க்கும் வகையில் சிறுபான்மையின மக்களின் கருத்துக்கள் அர்த்தமுள்ள விதத்தில் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு ஏதுவாக சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அதன் இறுதி அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் கடந்த செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்றது. இத்தேர்தல் சுதந்திரமானதும், நியாயமானதுமான முறையில் நடைபெறுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு இணங்க இலங்கைக்கு வருகை தந்த

11

## தான் ஒரு பட்டதாரி என்பதை சபாநாயகர் நிரூபிக்கவேண்டும்

### மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 07



சபாநாயகர் அசோக ரன்வல, தான் பட்டதாரி என்ப தை நிரூபிக்க வேண்டும் என, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.

சபாநாயகரால், தான் பட்டதாரி என்பதை நிரூபிக்க முடியாவிட்டால், பதவியை இராஜினாமா

11

## லொஹான் மீண்டும் கைது!

கொழும்பு, டிசெ. 07

பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீண்டும் கைது செய்யப் பட்டுள்ளார்.

குடிபோதையில் வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட விபத்து ஒன்று தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அவரை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசமைப்பு கவுன்ஸிலில் சிறீதரன்!

கொழும்பு, டிசெ. 07

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு எதிர்க்கட்சித் தரப்பின் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கு இடையில் இடம்பெற்ற தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜீவன் தொண்டமானை 11:10 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெற்ற தேர்தலில் அவர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலத்தை புதிதாக நிர்மாணிக்குக!

## ரவிகரன் எம்.பி சபையில் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 07

முல்லைத்தீவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் புதிதாக அமைக்கப்பட வேண்டும் எனவும், அதனை எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்குமாறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பலத்த வெள்ள அனர்த்தம் காரணமாக, பல்லாயிரக்கணக்கான வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்து பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூடி நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மக்கள் துன்பத்தில் மூழ்கியுள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாமல் காற்று, தொடர் மழை, பலத்த கடல் சீற்றம் போன்ற மிக மோசமான அனர்த்தங்கள் காரணமாக மிகவும் நொந்து போயுள்ளனர். எனவே, விவசாயிகளுக்கு, கடற்றொழிலாளர்களுக்கும், கால்நடைவளர்ப்பாளர்களுக்கும் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் கடந்த 1955ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதாகச் சொல்கின்றனர்.

பலத்த துன்பத்தை முல்லைத்தீவில் இருக்கும் இந்தப் பாலமும் அனுபவித்து வருகின்றது. இந்தப் பாலம் கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது பாரிய சேதங்களுக்கு உள்ளானது. அதற்கு முன்பும் சரி, பின்பும் சரி பாலத்தின் இரு ஓரங்களிலும் பாதுகாப்பு கற்கள்கூட இல்லாமல் காணப்படுகின்றன.

மழைகாலங்களில் நீரில் மூழ்கும் இந்தப் பாலத்தால் பயணிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் துன்பத்தைச் சொல்லில் விவரிக்க முடியாது. சுமார் 600 மீற்றர் தான் இந்தப் பாலத்தின் நீளம். நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பாலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தென்பகுதிகளில் இது போன்றதொரு பாலம் இருந்திருந்தால் எப்போதோ புதிய பாலம் அமைக்கப்பட்டிருக்கும். தொடர்ச்சியாகப் பலத்த இடர்பாடுகளைச் சந்தித்து வரும் முல்லைத்தீவு மக்களைப் போல் இந்தப் பாலமும் மக்களோடு சேர்ந்து துன்பத்தை அனுபவித்தே வருகின்றது. இந்தப் பாலத்தையும் அதன் சேதங்களையும் கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் உபாலி சமரசிங்கவும் பார்வையிட்டார்.

அத்தோடு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் பார்வையிட்டிருந்தனர்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான் ஆகியோரும் இந்தப் பாலம் புதிதாக அமைக்கப்பட வேண்டும் என ஆதரவு தெரிவித்தனர்.

தயவு செய்து நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் இந்த வட்டுவாகல் பாலத்தைப் புதிதாக நிர்மாணிப்பதற்கு ஆதரவு தாருங்கள்.

இந்த வட்டுவாகல் பாலத்தைப் புதிதாக நிர்மாணிப்பதற்கான திட்டத்தை, அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்குங்கள்- என்றார். (அ)

# சிறிய கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குக!

## சபையில் இடித்துரைத்த கஜேந்திரகுமார் எம்.பி

கொழும்பு, டிசெ. 07

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஒவ்வொரு கட்சியை சேர்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் கோரிக்கை விடுத்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட கட்சியாக எங்களுடைய கட்சி காணப்படுகிறது.

பாராளுமன்றின் பணிகள் என்னவென்று, ஒரு உறுப்பினரைக் கொண்ட கட்சியாகிய எங்களுக்கு தெரியவேண்டும்.

எனவே பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் நீங்கள் நெகிழ்வுத்தன்மையை கடைப்பிடித்து எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும்.

இன்றைய பாராளுமன்றத்தில் காணப்படுகின்ற நிலைமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஆகவே பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஒவ்வொரு கட்சியை சேர்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

முன்னைய அரசாங்கத்தில் எமக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. நாங்கள் பேசியிருந்தோம்.

ஆகவே சிறிய கட்சிப் பிரதிநிதிகளுக்கு பாராளுமன்ற அலுவல்கள் குழுவில் இடம் வழங்கப்பட்டிருந்தது - என்றார். (அ)

# தொண்டைமானாறு உவர்நீர் அணை நவம்பர் 18 முதல் திறக்கப்பட்டுள்ளது

## நீர்ப்பாசனத் திணைக்களம் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 07

தொண்டைமானாறு உவர் நீர் தடுப்பணை கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் திறக்கப்பட்டுள்ளதாக வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் எந்திரி என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.



தென்மராட்சி, வரணி பகுதியில் நெற்செய்கை நீரில் மூழ்கிய நிலையில் விவசாயிகள் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தியிருந்த நிலையில் இது தொடர்பில் வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் விளக்கமளித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தொண்டைமானாறு உவர் நீர் தடுப்பணைப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் இரவு அழைத்துச் செல்லப்பட்டதுடன், அணை திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இதன்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், சாவகச்சேரி பிரதேச செயலாளர், பிரசன்னமாகியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வரணி விவசாயிகள், தொண்டைமானாறு உவர் நீர் தடுப்பணை திறக்கப்பட்ட போதிலும் வெள்ளம் வழிந்தோடாமல் தேங்கியுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பெய்த பலத்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் தொண்டைமானாறு அணை திறக்கப்படாததால், வடிந்தோட இடமின்றி வயல் நிலங்களில் தேங்கி நிற்பதனால் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாக தெரிவித்து நேற்று வரணி விவசாயிகள், வயலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாவீரர் நினைவேந்தல் விடயத்தில் அரசின் நகர்வுகள் மோசமானவை

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 07

மாவீரர் தின நினைவேந்தல் விடயத்தில் அரசாங்கத்தின் நகர்வுகள் மோசமானதாக அமைந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் தமது ஜனநாயக கடமையை இரண்டு தேர்தல்களிலும் முறையாக மேற்கொண்டுள்ளனர். ஆனால் அந்த ஆணையை பெற்றுக்கொண்ட அரசாங்கத்தின் நிர்வாகத்தின் இயலாமையே வெளிப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தியினர் தம்மிடம் நாட்டை ஒப்படைக்குமாறும் தாம் திறன்பட நாட்டை நிர்வகித்து காண்பிப்பதாகவும் கூறினர். ஆனால் அவ்வாறு இடம்பெற்றதாக தெரியவில்லை.

மாவீரர் தின நினைவேந்தலுடன் தொடர்புடைய விடயத்தில் அரசாங்கத்தின் பதில் மோசமானதாக அமைந்துள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நகர்வுகள் தகவல் வழங்குபவர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதற்கு ஒப்பான செயல் என நீதிமன்றமே கூறியுள்ளது. அதே போன்று மாவீரர் தின நினைவேந்தல்கள் வடக்கு-கிழக்கில் 245 இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றில் 10 இடங்களில் பிரிவினைவாதத்துடன் தொடர்புடைய இலச்சினைகள் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் விடயதானங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் ஆனந்த விஜயபால பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இருப்பினும் அதற்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால் அந்த விடயத்தை காட்சிப்படுத்தும் வகையில் பதிவுகளை மேற்கொண்ட நால்வரை கைது செய்துள்ளனர்-என்றார்.

# புன்னைநீராவி நாதன் திட்ட கிராமத்தில் 3 பிள்ளைகளின் தாயார் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் திட்ட கிராமத்தில் நேற்று முன் தினம் மாலை, 35 வயதான மூன்று பிள்ளைகளின் தயார் ஒருவர் தூங்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்த தர்மபுரம் பொலிஸார், குறித்த தாயார் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டனர். சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கிளிநொச்சி மாவட்ட தொழிற்சந்தை தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வளாகத்தில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, தொழிற்சந்தை நிகழ்வினை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மேலும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந.இன்பராஜ், மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.சந்தீபன், நகமா நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் இரா.சஞ்ஜெய்காந்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த தொழிற்சந்தையில் 40ற்கும் மேற்பட்ட அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள், மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களும் கலந்துகொண்டு தொழில் வாய்ப்பை வழங்கி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் தேடும் இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதை அவதானிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.12.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மதுபானசாலை அரசியல்

வடக்கு, கிழக்கில் வழங்கப்பட்ட மதுபான சாலைகளுக்கான அனுமதி தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு, தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியிருந்தார். சரி நாங்கள் நாளையே வெளியிடுகின்றோம் என்று அரசாங்க அமைச்சரும் தெரிவித்திருந்தார். அதன்படி எந்த மாவட்டத்துக்கு எத்தனை மதுபானசாலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்னும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் வரலாற்றுரீதியாக வாழ்ந்துவரும் ஈழத் தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் இருப்புக்கான தீர்வு மற்றும் தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பல்வேறுவிதமான பிரச்னைகள் தொடர்பில் குரல் எழுப்பி வந்த, தமிழ் (தேசிய) அரசியல்வாதிகள் இன்று வடக்கு, கிழக்கிற்கு எத்தனை மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது, அதனை யாருக்கு வழங்கினார்கள் என்னும் தகவல்களை கோரிவருகின்றனர். தங்களுக்குள் இருக்கும் சிலரை தோற்கடித்து, அவர்களை அரசியலிலிருந்து ஓரங்கட்டுவதற்காகத்தான் அதனையும் கோருகின்றனர் - மக்களின் நன்மைக்காக அல்ல - ஏனெனில் தேர்தல் காலத்தில் தங்களின் வெற்றிக்காக அரசியல்வாதிகள் மதுபானம் வழங்குவதையும் மக்கள் அறிவார்கள்.

உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள், இன்று மதுபான சாலைகள் தொடர்பில் பேசும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்றால் - இது யாருடைய கெட்டித்தனம். ரணில் விக்கிரமசிங்க அதிகார அரசியலிலிருந்து வெளியேறினாலும் கூட, அவரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அதிர்வுகளிலிருந்து தமிழ் அரசியல்வாதிகளால் இன்னும் விடுபட முடியவில்லை - தள்ளாடிக் கொண்டிருக்கின்றனர்.

மதுபான சாலைகள் தொடர்பான விவரங்கள் எதற்காக கேட்கப்படுகின்றன? ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழ் அரசியல்வாதிகளை தங்கள் பக்கம் எடுக்கும் நோக்கில் சலுகையாக, மதுபான சாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை ரணில் வழங்கியிருக்கின்றார். அது ஒரு வகையில் அரசியல் கையூட்டுத்தான். ஆனால் இலங்கைத் தீவின் அதிகார அரசியலில் இவ்வாறான அரசியல் கையூட்டுக்கள் முதலும் அல்ல - அதேபோல் இறுதியுமல்ல.

நாடாளுமன்ற தேர்தல் பிரசார காலத்தில் மதுபான சாலைகள் தொடர்பான தகவல்களை வெளியிடப் போவதாக அநுரகுமார திஸநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் வடக்கு, கிழக்கில் குறித்த மதுபான சாலைகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்னும் தகவல் ஆதாரபூர்வமாக இதுவரையில் வெளியிடப்படவில்லை.

ஒரு வகையில் ரணிலின் தந்திரத்தை இன்னொரு வகையில் அநுர தொடர்கின்றார் போன்றே தெரிகின்றது. அநுரகுமார திஸநாயக்க எண்ணினால் குறித்த விவரங்களை வெளியிடுவது சாதாரண விடயம். ஆனாலும் குறித்த சில தமிழ் அரசியல்வாதிகள், தங்களுடைய எதிர்கால நகர்வுகளுக்கு தேவைப்படலாம் என்பதாலேயே, அநுரகுமார விடயங்களை வெளிப்படுத்தாமல் தாமதித்துவருகின்றார். அநுர இந்த விடயத்தில் தாமதிப்பதை அல்லது தவிர்ப்பதை வேறு எந்த அடிப்படையில் விளங்கிக்கொள்வது?

மதுபானசாலைகள் தொடர்பில் தமிழ் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் அடிக்கடி பேசுவதானது, தமிழ் சமூகத்துக்கு பெருமையல்ல - உண்மையில் சிறுமை. பல்லாயிரக்கணக்கான உயிர்களை முதலீடு செய்து, கட்டிக்காப்பாற்றிய தமிழர் விடுதலை அரசியலானது, இன்று எந்த இடத்தில் வந்து நிற்கின்றது? ஈழத் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய திட்டங்கள் தொடர்பில் சிந்திக்கவேண்டிய தமிழ் மக்களின் பிரதிநிதிகளை மதுபானத்திற்குள் முடக்கியிருப்பதும் கூட, சிங்கள இராஜ தந்திரத்தின் வெற்றிதான்.

# யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் வீட்டுக்குள் நுழைந்து திருட்டு!

## திட்டமிட்டவரும் நேற்றுக் கைதானார்

யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ்ப்பாணம், ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதி யில் வீட்டுக்குள் நுழைந்து தாலிக்கொடி உட்பட தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீட்டார் வெளியே சென்றிருந்தவேளை மதியம் வீட்டின் கூரையை பிரித்து இந்தத் திருட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் நகையை திரு டிய சந்தேகநபரை கைது செய்ததுடன் நகையையும் மீட்டனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் இன்னொருவரும் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரே குறித்த திருட்டுக்கு திட்டமிட்டு கொடுத்துள்ளார் என்பதுடன், அவர் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உற வினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு திட்டமிட்டு கொடுத்து திருட்டு இடம் பெற்ற பின்னர், முறைப்பாடு செய்வதற்காக திருட்டு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன் சேர்ந்து சுன்னாகம் பொலிஸ் நிலை யத்துக்குச் சென்றும் உள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த அருளுரையும் உதவிகள் வழங்கலும்



யாழ்ப்பாணம், டிசெ. 07

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடைபெறும் அருளுரையும் உதவி வழங்கலும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆன்மீக அருளுரையை 'குருவாய் வருவாய்' என்ற தலைப்பில் அதிபர் திருமதி கவிதா லலீசன் நிகழ்த்தினார்.

இதேவேளை, நல்லூரரை சேர்ந்த சிறீ யமுனாம்பிகா சமேத சிவசங்கரனார் திருக்கோவில் (பூதவராயர்) ஆலய கட்டடப் பணிக்காக 2 இலட்சம் ரூபாய் நிதியும், மல்லாகம் தெற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் கோரிக்கைக்கு அமைய கிணறுகள் தூய்மைப்படுத்தலுக்காக ஒரு பரல் குளோரினும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-02)

# சேர். பொன். இராமநாதனின் 94ஆவது சிரார்த்த தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 07


சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதனின் 94 ஆவது சிரார்த்த தின குரு பூசை தின நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வையொட்டி பல்கலைக்கழத்தினுள் அமைந்துள்ள சிறீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து சேர். பொன். இராமநாதன், ஆறுமுக நாவலர் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து தீபாராதனை நடைபெற்றது.




தொடர்ந்து பல்கலைக்கழகப் பேரவை மண்டபத்தினுள் சிரார்த்த தின குருபூசை தின நிகழ்வு நடைபெற்றது. துணைவேந்தர், பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் சைவ சமய அபிமானிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். மரியாதை கூடும்.

**இடபம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உடல் நிலை சீராகும். லாபம் வரும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உறவினர்கள். நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம்.

**கடகம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள் நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கன்னி**
பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**துலாம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புதுவேலை அமையும்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**தனுசு**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது. இழப்புகள் ஏற்படும்.

**கும்பம்**
திடீர் பயணங்கள் இருக்கும். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு.

**மீனம்**
எதார்த்தமாக பேசிக்கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

# சுற்றுச்சூழலை பாதுகாக்க பாடசாலை மட்டங்களிலிருந்து கற்பிக்க வேண்டும்

## மன்னார் அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார், டிச. 07
பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் கழிகளை கண்ட கண்ட இடங்களில் வீசி எறியாமல், அவற்றை உரிய இடத்தில் போடுவதை பாடசாலை மட்டங்களிலிருந்து பழக்கப்படுத்த வேண்டும் என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

யு. என். டி. பி நிறுவனத்தால் மன்னாரில் முன்னெடுக்கப்படும் சுற்றுச்சூழல் தொடர்பான அபிவிருத்தித் திட்ட மீளாய்வுக்கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது .

இதன்போது அரச அதிபர் மேலும் கூறுகையில்,யு. என். டி. பி. அமைப்பானது மன்னார் மாவட்டத்தில் ஆறு குழுக்களுக்கு நிதி வழங்கி திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

சூழல் நேயத்தை முன்னிறுத்தி இந்தத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. சூழல் மாசடையாது அதாவது உச்சக் கட்டத்துக்கு செல்லாது தடுக்கும் நோக்கில் இத்திட்டம் நடைபெறுகிறது.

நாங்கள் முன்னெடுத்துச் செல்லுகின்ற எந்த அபிவிருத்தித் திட்டமும் சூழலோடு சேர்ந்த திட்டமாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் இவை நிலைத்திருக்கும்.

சூழலுக்குப் பொருத்தமான திட்டங்களை பிரதேச செயலாளர்களுடன் பங்குதாரர்கள் இணைந்து செயல்படும்போது தான் இவை சிறப்பாக அமையும்.

இங்கு முன்னெடுக்கப் படுகின்ற திட்டங்களை நோக்கும் போது மிகவும் பிரயோசனமானதாக இருக்கிறது. ஆகவே, அனைத்து பங்குதாரர்களும் உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

பிளாஸ்ரிக் பொருட்களை மற்றும் கழிவுகளை கண்ட கண்ட இடங்களில் வீசி எறியாமல் அவற்றை உரிய இடத்தில் போடுவதை பாடசாலை மட்டங்களில் இருந்து பழக்கப்படுத்த வேண்டும்.

இவ்வாறு குப்பைகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை உரிய இடங்களில் போடும் பழக்கத்தை பொது மக்களும் கொண்டிருக்க வேண்டும்.

நகர சபை மற்றும் பிரதேச சபைகள் இவற்றை நடைமுறைப்படுத்துகின்றபோதும் இவை விஸ்தரிக்கப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தை சுற்றுச்சூழல், பச்சயம் கொண்ட மாவட்டமாக வைத்திருக்க முடியும்- என்றார். (எ)

# தங்க நகை திருடிய குற்றச்சாட்டில் யாழில் 20 வயது இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 06
யாழ்ப்பாணத்தில் பட்டப் பகலில் கூரையை பிரித்து இறங்கி தங்க நகைகளைத் திருடிய இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியில் வீடு புகுந்து தாலிக்கொடி உட்பட்ட சில தங்க நகைகள் என சுமார் 10 பவுண் நகைகள் திருடப்பட்டன.

வீட்டில் இருந்தவர்கள் வெளியே சென்றிருந்தவேளை மதியம் வீட்டின் கூரையை பிரித்து இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது குறித்துச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் குறித்த நகைகளைத் திருடிய, அதே பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவர் திருடிய நகையும் பறிமுதல் செய்யப்பட்டது. அவர் ஏற்கனவே பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் கூறினர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ- 05)

# “13 முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும்”

யாழ்ப்பாணம், டிசெ. 07
தமிழ் மக்கள் விரும்பும் ஓர் அரசியலமைப்பு வரும் வரையில் 13 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,அரசியல் தீர்வு எட்டப்படும்வரையில் மாகாண சபைகளுக்கு உரித்தான பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதுடன் மாகாண சபைத் தேர்தல்களும் மிக விரைவாக நடத்தப்பட்டு மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளிடம் மாகாண சபை நிர்வாகங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

13 ஆவது திருத்தம் மட்டுமே தமிழ் மக்கள் கைவசம் இருக்கக்கூடிய ஒரேயொரு பாதுகாப்பு அரணாக தற்பொழுது இருக்கின்றது.

மாகாண சபை முறைமையையோ அல்லது அதற்கான அதிகாரங்களை வழங்குகின்ற பதின்மூன்றாவது திருத்தத்தையோ இல்லாதொழிக்க நாங்கள் அனுமதிக்கக்கூடாது.

37 வருடங்களாக இந்த மாகாண சபையால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றும் சிலர் கூறுகின்றார்கள்.

ஆனால், 1988 ஆம் ஆண்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போதும் கூட 2009 ஆம் ஆண்டுவரை இந்த நாட்டில் ஒரு யுத்தம் நடைபெற்றது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்களும் மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமலும் அதனை ஒத்தி வைப்பதுடன் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தாமலும் காலத்தை கடத்தினார்களே தவிர மாகாண சபை முறைமையை உயிர்த்துடிப்புடன் செயல்படுத்துவதற்கான எந்த அக்கறையையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை.

13 ஆவது திருத்தத்தைப் பற்றிப் பேசினால் புனிதம் கெட்டுவிடும், தீட்டு ஒட்டிக் கொள்ளும் என்ற கற்பனாவாத கதைகளைக் கைவிட்டு தமிழ் மக்கள் விரும்புகின்ற ஓர் அரசியல் சாசனம் வரும்வரையில் 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் அதற்காகக் குரல்கொடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)



...பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் நாட்டில்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

**நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத் தன்மையுடன் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகையில் அரசியல் பக்கச்சார்பு அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எந்தவொரு அரசியல் அழுத்தங்களும் இனிமேல் இடம்பெறாது எனவும் நாட்டுக்கு உகந்த, தூய்மையான முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முழுச் சுதந்திரத்தை இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை போலவே நாட்டுக்குள் நிதி ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் அது தொடர்பிலான பாரிய பொறுப்பு முதலீட்டுச் சபைக்கு உள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

முதலீட்டுச் சபைக்குள்ள பொறுப்பை சரியாக நிறைவேற்ற அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும் என்றும், நாட்டுக்கு உகந்த முதலீடுகளை கொண்டு வருவதற்கு முதலீட்டுச் சபைக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

முதலீட்டுச் சபையின் செயற்திறனை அதிகரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பெற்றுக்கொடுப்பதற்கும், புதிதாக ஐந்து முதலீட்டு வலயங்களை அடுத்த வருடத்தில் ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், பணிப்பாளர் நாயகம் ரேணுக வீரக்கோன் உள்ளிட்ட அதிகாரிகள் இதன்போது உடனிருந்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# அரிசி பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் மக்கள்

கொழும்பு, டிசெ. 07

நேற்று முன்தினம் முதல் சதொச ஊடாக 2 இலட்சம் கிலோ கிராம் அரிசி விடுவிக்கப்படும் என விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்திருந்த போதிலும் நேற்று வரை விற்பனை நிலையங்களுக்கு அரிசி கிடைக்கப் பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் வசந்த சமரசிங்க கூறியதைப் போன்று, சதொச ஊடாக அரிசியைப் பெற்றுக் கொள்ள முயற்சித்த போதும் தங்களுக்கு அரிசி கிடைக்கவில்லை எனவும் நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, சிவப்பு அரிசிக்குத் தென் மாகாணத்தில் அதிக தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அக்குரஸ்ஸ பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், சிவப்பு அரிசியை அதிகபட்ச சில்லறை விலையான 210 ரூபாவுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் காரணமாகக் குறித்த வர்த்தக நிலையங்களை அண்மித்து நீண்ட மக்கள் வரிசைகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் வாடிக்கையாளர் ஒருவருக்கு 3 கிலோ கிராம் என்ற அடிப்படையிலேயே சிவப்பு அரிசி வழங்கப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# இலங்கை சுங்கத் திணைக்களம் வரலாற்றில் அதிக வரி வருமானம்

கொழும்பு, டிசெ. 07

இலங்கை சுங்கத் திணைக்களம் வரலாற்றில் அதிக வரி வருமானத்தை ஈட்டியுள்ளது.

இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் 90 சதவீதத்திற்கும் அதிகமான வரி வருமானத்தை இலங்கை சுங்கத் திணைக்களம் ஈட்டியுள்ளதாக மேலதிக பணிப்பாளர் நாயகமும் பேச்சாளருமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

வரி வருமானத்தின் ஊடாக இந்த வருடத்தில் 1.53 ட்ரில்லியன் ரூபா எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கமைய, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1.38 ட்ரில்லியன் ரூபாவை வரி வருமானமாக இலங்கை சுங்கத் திணைக்களம் ஈட்டியுள்ளது. (அ)

# 30ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதியாளரால் முன்பதிவு!

கொழும்பு, டிசெ. 07

அரிசி தட்டுப்பாட்டுக்கு உடனடி தீர்வு காண்பதற்கு புறக்கோட்டையில் உள்ள இறக்குமதியாளர்கள், இந்தியாவிலிருந்து 25,000 முதல் 30,000 மெற்றிக் தொன் அரிசியை முன்பதிவு செய்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அனுமதியின் பிரகாரம், தனியாருக்கா கவும் இந்த அரிசி இருப்புக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் குறைவாக இருப்பதால், குறைந்த அளவு அரிசியை இறக்குமதி செய்ய முடியும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நாடு, பச்சை, சம்பா ஆகிய அரிசி வகைகள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 06

நாட்டில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இயக்கத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நிரூபா பல்லேவத்த தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அதன்படி, நாட்டில் இவ்வருடத்தின் முதல் 10 மாதங்களில் 1,084 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான தொழுநோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 115 ஆகும்.

அத்துடன், கம்பஹா மாவட்டத்திலிருந்து 113 தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாட்டில் கடந்த 2023 ஆம் ஆண்டில் 1,500 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# காவலாளியைக் கொன்றுவிட்டு இ.போ.சவில் பணம் கொள்ளை!

## நுவரெலியாவில் பயங்கரம்

கொழும்பு, டிசெ. 07

நுவரெலியா இ.போ.ச டிப்போ காவலாளியை கொலை செய்து டிப்போவில் வைக்கப்பட்டிருந்த சுமார் ஒன்பது இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று அதிகாலை வேளையிலேயே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா கல்பாய பிரதேசத்தைச் சேர்ந்த கே. லோகேஸ்வரன் என்ற 85 வயதுடைய காவலாளியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

காவலாளியை கொன்றுவிட்டு டிப்போவில் இருந்த அலுமாரியில் இருந்து சுமார் ஒன்பது லட்சம் ரூபா பணம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காவலாளி தனக்குரிய பாதுகாப்பு அறைப் பகுதியில் இருந்ததாகவும், அப்போது தலைப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கியே அவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவத்தின் போது, டிப்போவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரும், காசாளரும் டிப்போவில் தங்கியிருந்த போதிலும், அவர்கள் உறங்கிக்கொண்டிருந்தவேளையில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா லங்கம டிப்போவில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பிற்பகல் ஓடிய பஸ்களின் வருமானம் வங்கியில் வைப்பிலிடுவதற்காக அலுமாரியில் வைக்கப்பட்டிருந்ததாக அந்த டிப்போவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவான் பார்வையிட்டதன் பின்னர் விசாரணைகள் மேற்கொண்டு சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரிசி மாபியாவை உருவாக்க முயற்சி!

## அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, டிசெ. 07

அரிசி விடயத்தில் மாபியாவை உருவாக்குவதற்கு ஒரு சிலர் முயற்சிப்பதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக சபையில் நேற்று தினம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டு மக்களின் நாளொன்றில் நுகர்வுக்காக ஆறாயிரத்து 500 மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படுகிறது. உள்நாட்டு சந்தைக்கு உடனடியாக அரசியை விநியோகிக்க வேண்டியுள்ளது.

இப்போதைக்கு சதொச ஊடாக இரண்டு இலட்சம் கிலோ கிராம் அரிசி விநியோகிகப்படுகிறது. அவ்வாறு விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேலதிகமாகவும் ஆலைகளி லிருந்து அரிசி கிடைக்கப்பெறுகிறது.

ஆகவே, குறுகிய காலத்தின் அடிப்படையில் அரிசி தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீண்ட கால அடிப்படையில் நாம் பொருத்தமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.

அரிசி விடயத்தில் மாபியாவை உருவாக்குவதற்கு ஒரு சிலர் முயற்சித்து வருகிறார்கள். அவர்களில் பாராளுமன்ற தேசியப் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அந்த விவரங்களை நான் வெளியிடுவேன்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபா குழு தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு!

## சபையில் கூறினார் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, டிசெ. 07

**அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபைத் தலைவர் அமைச்சர் பிமல்ரத்நாயக்க தெரிவித்தார்.**

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க-அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிகளுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம்.

நீங்கள் அதை கேட்கவில்லை. அதேபோன்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கோப் குழுவின் (பொது நிறுவனங்கள் பற்றி குழு) தலைவர் பதவி ஆளுங்கட்சிக்கு தேவை என்று கூறினோம்.

முதல் கால கட்டத்தில், முந்தைய அரசாங்கத்தின் விடயங்களை பரிசீலிக்கவேண்டும். அந்த அரசின் அமைச்சர் ஒருவர் கோப் குழுவின் தலைவராக வருவதை நாங்கள் விரும்பவில்லை-என்றார்.

இதேவேளை, நேற்று காலை பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போது, துறைசார் குழுவை நியமிப்பதற்கு ஜனவரி 31ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக சபைத் தலைவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு, நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, டிஜிற்றல் பொருளாதார அமைச்சு உள்ளிட்ட 24 அமைச்சுகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டுமென அவர் கூறினார். (அ)

# திறைசேரியின் செயலருடன் அமெரிக்க உயர் குழு பேச்சு

கொழும்பு, டிசெ. 07

அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச்செயலர் ரொபர்ட் கப்ரொத் மற்றும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று தினம் நிதியமைச்சில் நடைபெற்றது. இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் கலந்துகொண்டார்.

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அமெரிக்காவினால் எத்தகைய உதவிகளை வழங்க முடியும் என்பது குறித்து இரு நாடுகளுக்கும் இடையிலான உயர்மட்ட பிரதிநிதிகளின் சந்திப்பில் ஆராயப்பட்டது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ தலைமையில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் பிரதி உதவிப்பணிப்பாளர் அஞ்சலி கௌர் மற்றும் திறைசேரியின் பிரதி உதவிச்செயலர் ரொபர்ட் கப்ரொத் ஆகியோர் அடங்கிய அமெரிக்க உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

இந்த சந்திப்பின்போது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அமெரிக்காவினால் எத்தகைய உதவிகளை வழங்க முடியும் என்பது குறித்தும், நிதியியல் மீளெழுச்சித்தன்மையை வலுப்படுத்தக்கூடிய வாறான இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டிணைந்த வாய்ப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# சிறுமியை கொன்று சடலத்தை மலக்குழியில் வீசிய தாயின் இரண்டாவது கணவன் கைது!

கொழும்பு, டிசெ. 07

14 வயது சிறுமியை கொலை செய்து சடலத்தை மலசல குழியில் வீசியதாகக் கூறப்படும் சிறுமியின் தாயின் இரண்டாவது கணவன் கைது செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் கம்பஹா அக்கரவிட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்ட சிறுமி கடந்த 02 ஆம் திகதியிலிருந்து காணாமல்போயுள்ளதாக சிறுமியின் தாய் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், வீடொன்றில் உள்ள மலசல கூடக் குழியிலிருந்து சிறுமியின் சடலத்தை கண்டுபிடித்துள்ளனர்.

சிறுமியின் தாயின் இரண்டாவது கணவன் சிறுமியை கொலை செய்து சடலத்தை மலசலகூடக் குழியில் வீசியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரான சிறுமியின் தாயின் இரண்டாவது கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மதுவரி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் ஒழுங்கான முறை பின்பற்றப்படவேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார உத்தரவு

கொழும்பு, டிசெ. 07

மதுவரி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் ஒழுங்கான முறைமையொன்றைப் பின்பற்றுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்தார்.

மதுவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அதிகாரிகள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டத்துக்கு முரணான விடயங்களை மேற்கொள்ளக்கூடாது எனவும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சட்டத்தை அமுல்படுத்துவது அவசியம் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி, உரிய நேரத்தில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

மதுவரி வசூலிப்பதில் உள்ள சிரமங்கள் மற்றும் அதில் இடம்பெறும் முறைகேடுகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அறவிடப்பட வேண்டிய வரியை வசூல் செய்தல், கறுப்புப் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் வரி வசூலிக்க முடியாத நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை தடை செய்தல் போன்ற புதிய முறைகள் குறித்தும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், வரி அறவீடு செய்வதில் தற்போதுள்ள சட்டதிட்டங்களில் காணப்படும் குறைபாடு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், வரி அறவீட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் மற்றும் மதுவரி திணைக்களத்தர் ஆட்சேர்ப்பு முறையிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்களிடையில் நல்லபிப்பிராயம் கிடையாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாட்டின் பொருளாதாரத்திற்கு சாதகமான வகையில் அந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

# மகாவலி கங்கையில் இளைஞனின் சடலம்!

கொழும்பு, டிசெ. 07

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மகாவலி கங்கையிலிருந்து நேற்று முன் தினம் வியாழக்கிழமை பிற்பகல் இளைஞன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காகக் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மதுபானச்சாலை அனுமதி குற்றச்சாட்டுக்கு ரணில் தரப்பிலிருந்து வார இறுதியில் பதில்

கொழும்பு, டிசெ. 07

கடந்த அரசாங்க காலத்தில் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கியமை தொடர்பில் எதிர்வரும் வார இறுதியில் நாட்டுக்கு விரிவான விளக்கத்தை முன்வைக்கவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த தேர்தல் காலத்தில் 361 மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் அவைத்தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இது இடம்பெறவுள்ளதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மதுபான உரிமம் வழங்கும் முறை குறித்து விரிவாக விளக்கப்பட உள்ளதாக புதிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்களின் பட்டியல் பிமல் ரத்நாயக்கவினால் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (அ)

# வரி செலுத்தப்பட்டால் அரிசி விடுவிக்கப்படும்

கொழும்பு, டிசெ. 07

தேவையான வரிகள் செலுத்தப்பட்டால், இறக்குமதி செய்யப்படும் அரிசியின் இருப்பு நான்கு மணித்தியாலங்களுக்குள் கொழும்பு துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்படும் என மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த நடவடிக்கைகள் இறக்குமதி செயன் முறையை சீர்செய்வதையும் உள்ளூர் சந்தைக்கு அரிசி உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எனவே, இறக்குமதியாளர்கள் [illegible] களைத் தீர்ப்பதன் மூலம் பொருட்களை விடுவிக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சுமார் 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அருக்கொட தெரிவித்தார்.

இதற்காக 2,500 முதல் 3,000 அரிசி கொள்கலன்கள் நாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊழலற்ற ஆட்சியை அரசு செயலில் காட்டவேண்டும்!

## குகதாசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 07

**ஊழல், இனவாதம், மதவாதம் அற்ற, வெளிப்படைத்தன்மை கொண்ட ஆட்சியை சொல்லில் மாத்திரமின்றி அரசாங்கம் செயலிலும் காட்ட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி தனது உரையில் அரச சேவையை வினைத்திறன் உள்ளதாக ஆக்கப் போவதாகவும் சட்ட ஆட்சியை நிலைநாட்டப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவையினை உலகத் தரத்திற்கு உயர்த்தினால் தான் இந்த நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல முடியும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது 139 குடிமக்களுக்கு ஓர் அரச ஊழியர் இருந்தார்.

இன்று 13 பேருக்கு ஓர் அரசு ஊழியர் காணப்படுகின்றார் என கூறப்படுகின்றது. எனவே தான் அரச சேவையினை ஒழுங்குபடுத்தி மீளமைக்கவேண்டும்.

அடுத்து அவர் பேசுகையில் பொதுச் சொத்துக்களை களவாடியவர்களை, மோசடி செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்கவுள்ளதாகக் கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் வந்த அரசுகளும் தேர்தல் காலங்களில் இவ்வாறு கூறின. ஆட்சிக்கு வந்த பின்பு எதுவும் நடக்கவில்லை. யாரும் தண்டிக்கப்படவும் இல்லை. ஆனால் இந்த அரசு கூறியதனை கூறியவாறு செய்யும் என நம்புகின்றேன்.

அத்தோடு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்படுவது மாத்திரம் அன்றி அவர்கள் மோசடி செய்ததாக கூறப்படும் பணத்தினையும் வளத்தினையும் மீளப் பெற வேண்டும்-என்றார். (அ)

# பயிரை நாசமாக்கும் விலங்குகளை விவசாயிகள் என்னவும் செய்யலாம்!

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

விவசாயிகள் தங்கள் வயல்களில் வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதம் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்க முடியும் என விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.

வன விலங்குகள் குறிப்பாக குரங்குகளால் பயிர்கள் சேதப்படுத்துவது பாரிய பிரச்னையாக மாறியுள்ளதாகவும் வன விலங்குகளால் ஏற்படும் சேதம் விவசாயிகளுக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் பிரச்னையாக மாறியுள்ளதாகவும் அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

விவசாயிகள் தங்கள் வயல்களில் வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்தை தவிர்க்க எடுக்க நடவடிக்கைக்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் பொறுப்பை அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அது விரைவில் தீர்க்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வன விலங்குகள் குறிப்பாக குரங்குகளால் பயிர்கள் சேதப்படுத்துவது பாரிய பிரச்னையாக மாறியுள்ளதாகவும் வன விலங்குகளால் ஏற்படும் சேதம் விவசாயிகளுக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் பிரச்னையாக மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் பொறுப்பை அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அது விரைவில் தீர்க்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

# போலி தகவல் மூலம் தண்ணீர் போத்தல் தயாரித்த வணிக நிறுவனம் சோதனை!

கொழும்பு, டிசெ. 07

மாவனெல்ல - ஹெம்மாதகம பிரதேசத்தில் போலி தகவலைப் பயன்படுத்தி குடிதண்ணீர் போத்தல்களைத் தயாரித்த வணிக நிறுவனமொன்று நுகர்வோர் விவகார அதிகார சபையினால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

பதிவுச் சான்றிதழ் காலாவதியான நிலையில் குறித்த நிறுவனம் இயங்கி வந்தமை தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குறித்த குடிதண்ணீர் போத்தல் தயாரிப்பு நிறுவனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. (அ)

# உணவகங்களில் விசேட சோதனைக்கு 2,000 உத்தியோகத்தர்கள் களமிறக்கம்

கொழும்பு, டிசெ. 07

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில், விசேட சோதனை நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் 2000 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சோதனைகளின் போது உணவகங்களில் உள்ள சமைத்த உணவுகளை பரிசோதிக்கும் பணியே பிரதானமாக இடம்பெறவுள்ளதாக, அதன் செயலாளர் சமில் முதுகுடா குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையுடன் உணவு மற்றும் பானங்களின் தூய்மை தொடர்பில் பல பிரச்னைகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக பல தொற்று நோய்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார். (அ)

# மாணவியைத் துஷ்பிரயோகம் செய்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பிணை

கொழும்பு, டிசெ. 07

பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் கடந்த 04ஆம் திகதி கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை 50 ஆயிரம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யுமாறு பண்டாரவளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெலிமடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 59 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த மாணவியின் தாயும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார்.

பிணையில் விடுதலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த 02ஆம் திகதி பொலிஸ் ஓட்டோவில் தியத்தலாவை பிரதேசத்துக்குச் சென்று பாடசாலை மாணவியை அங்கு வரவழைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர் பிணையில் விடுதலை செய்யப்பட் டுள்ளார். (அ)

# ரணில் சென்ற பாதையில் நாங்கள் செல்லவில்லை!

## வைத்தியர் நஜித் இந்திக

கொழும்பு, டிசெ. 07

74 ஆண்டு கால அரசியலை நாங்கள் சபிக்கவில்லை. மாறாக 74 ஆண்டுகால ஆட்சியின் பொருளாதார நெருக்கடிகளையே சுட்டிக்காட்டினோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதையில் அரசாங்கம் செல்லவில்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நஜித் இந்திக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் மக்கள் மத்தியில் வெறுப்பினை தூண்டிவிட்டதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது தவறானது. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நாட்டில் இரத்த வெள்ளம் ஓடும், முஸ்லிம் சமூகத்தினர் தாடி வளர்க்க முடியாது, போயாவுக்கு விகாரைக்கு செல்ல முடியாது. தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தின ரின் உரிமைகள் மறுக்கப்படும் என்று யார் வெறுப்பைத் தூண்டிவிட்டது. எதிர்தரப்பினரே இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

தேர்தல் வெற்றிக்காக ஒரு போதும் வெறுப்பினை தூண்டிவிடவில்லை. 74 ஆண்டுகால அரசியல் சாபம் என்று குறிப்பிடவில்லை. மாறாக 74 ஆண்டு கால ஆட்சியினால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பையே விமர்சித்தோம். ஆகவே மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களை குறிப்பிடுவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் சென்ற பாதையில் தற்போதைய அரசாங்கம் செல்வதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பாதையை ஆராய வேண்டும். 1977 முதல் 1994 , 2001 முதல் 2003 , 2015 முதல் 2019 மற்றும் 2022 -2024 என்ற காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி என்ற அடிப்படையில் பதவி வகித்துள்ளார்.

அரச வளங்களை தனியார் மயப்படுத்துவதும், மிகுதியான வளங்களை விற்பதும் தான் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை.இவரது அரசியல் மற்றும் பொருளாதார கொள்கை இந்த நாட்டுக்கு எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை ஆராய வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்கு இணக்கமான கொள்கைகளையே எதிர்த்தரப்பினர் மக்கள் மத்தியில் முன்வைத்தார்கள். ஆனால் மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை-என்றார். (அ)

# ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை!

கொழும்பு, டிசெ. 07

ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்து அவற்றில் பயனுள்ள வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பிக்குமாறும் ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைத் திட்டங்கள் செயல்திறன் அற்றவையாக காணப்படும் பட்சத்தில் அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க அறிவுறுத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பின்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டதுடன், சூரிய சக்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்து அவற்றில் பயனுள்ள வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பிக்குமாறு வலியுறுத்திய ஜனாதிபதி, ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் செயல்திறன் அற்றவையாக காணப்படும் பட்சத்தில் அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் டீ.எம்.டபிள்யூ. ஜே.பண்டாரஉள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரி கள் பலர் இந்தக் கலந்துரை யாடலில் கலந்துகொண்டிருந் ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலகம் குறித்து கலந்துரையாடி தீர்வுகாண வேண்டும்

## சபையில் கூறினார் ஹக்கீம் எம். பி.

கல்முனை, டிசெ. 07

**கல்முனை பிரதேச செயலகம் தொடர்பில் அந்த பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் பிரச்னை இருக்கிறது. அதனால், இது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடி இந்த பிரச்னையை எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில்,இலங்கை தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடி உள்ளனர். கலந்துரையாடலுக்கு பின்னரும் பாராளுமன்றத்திலும் அது தொடர்பான விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. குறிப்பாக கல்முனை பிரதேச செயலக தொகுதி தொடர்பான பிரச்னையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி தலையிடுவதாக வாக்குறுதி வழங்கியதாக இந்த சபையில் தெரிவிக்கப்பட்டது.

என்றாலும் கல்முனை பிரதேச செயலகம் தொடர்பில் அந்த பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் பிரச்னை இருக்கிறது. அதனால் இது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடுவோம். கலந்துரையாடல் ஊடாக இந்தப் பிரச்னையை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும்.

இந்த விடயம் தொடர்பில் சாணக்கியன் எம். பி. மற்றும் ப. சத்தியலிங்கம் எம்.பியுடன் கலந்துரையாடி இருக்கிறேன். எமது பிரச்னை தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடி இருக்கிறேன். அதனால், இவ்வாறான பிரச்னைகள் - முரண்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக்கொள்வோம் என தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் தற்போது வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலதிகமாக எல்லை நிர்ணயம் தொடர்பாக பல குழுக்களும் இருக்கின்றன.

இந்த விடயங்கள் தொடர்பான அனைத்தை யும் கருத்தில்கொண்டு ஒரு தீர்மானத்துக்கு வருவோம் என நான் யோசனை முன்வைக் கிறேன்- என்றார். (எ)

# வாழைச்சேனையில் விபத்து ஒருவர் பலி, 3 பேர் படுகாயம்

வாழைச்சேனை, டிசெ. 07

மட்டக்களப்பு, வாழைச்சேனை மியான்குளம் பகுதியில் லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை, லொறி சாரதியை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

புனானை ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடையவரே உயிரிழந்தார்.

பொலநறுவை பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த லொறியும் வாழைச்சேனையிலிருந்து புனானை நோக்கிப் பயணித்த ஓட்டோவும் மியான்குளம் பகுதியில் மோதி விபத்துக்குள்ளாயின.

இதில் ஓட்டோவில் பயணித்த 65 வயது நபர் ஸ்தலத்திலேயே பலியானார்.

இந்த விபத்தில் புனானை ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் மற்றும் ரிதிதென்னையைச் சேர்ந்த ஓட்டோ சாரதி என மூவர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ)

# காரைதீவு பிரதேச பொதுமக்களுக்கு இராணுவத்தினர் குடிநீர் விநியோகம்

காரைதீவு, டிசெ. 07

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட காரைதீவு பிரதேசத்துக்கு இராணுவத்தினர் பௌஸர் மூலம் குடிநீர் வழங்கி வருகின்றனர்.

கடந்த 11 நாட்களாக ஆலயங்கள், பிரதேச சபை, பொது அமைப்புகள், தனியார் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் குடிநீர் வழங்கி வந்தனர்.

தற்போது இராணுவத்தினரும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (எ)

# உலர் உணவுப்பொருட்கள் வழங்கும் பணி ஆரம்பம்

மட்டக்களப்பு, டிசெ. 07

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் படிப்படியாக குறைந்துவரும் நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப்பொருட்கள் வழங்கும் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சத்துருக்கொண்டான் மக்களுக்கு ஒரு தொகுதி உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்ரினா முரளிதரன் தலைமையில் குறித்த உலருணவுப் பொதிகள் சத்துருக்கொண்டான் புளியடி முனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டது.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நவரூப ரஞ்ஜினி முகுந்தன், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சுபா சுதாகரன், அப்பகுதிக்கான கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு முதல் கட்டமாக 102 நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

குறித்த நிவாரணப் பொதிகள் கிழக்கு மாகாண ஆளுநரால் மட்டு. மாவட்ட அரசாங்க அதிபரிடம் வழங்கப்பட்டிருந்தன. (எ)

# அழிவடைந்த பயிர்களை பார்வையிட்ட அதிகாரிகள்

## இழப்பீடு பெற்றுத்தருவதாக வாக்குறுதி

திருகோணமலை, டிசெ. 07

திருகோணமலை மாவட்டம் குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தால் அழிவடைந்த பயிர்களை கமநல சேவை நிலைய அதிகாரிகள் பார்வையிட்டனர்.

குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட வன்னியனார்மடு, சூரங்கல், கரைச்சைத்திடல் முதலான பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட சுமார் 1350 இற்கும் மேற்பட்ட ஏக்கர் வேளாண்மை பாதிக்கப்பட்டது. இதனையே அதிகாரிகள் பார்வையிட்டனர்.

குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். சாஜித், கிண்ணியா பிரதேச செயலக அதிகாரிகள், விவசாய திணைக்களம் மற்றும் விவசாய சங்கங்களின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இவர் கள் அனை வரும் இணைந்து சேத மதிப்பீட்டினை மேற்கொண்டனர்.



இந்த சேத மதிப்பீட்டினை கணிப்பீடு செய்து விவசாயிகளுக்கான முழுமையாக மற்றும் பகுதி அளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சாஜித் கூறுகையில்,தற்பொழுது சேத மதிப்பீட்டு குழுவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வயல்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்- என்றார்.

இதேவேளை, முழுமையான அழிவுகள் மற்றும் பகுதியளவில் அழிவுகள் முதலானவற்றை அதிகாரிகள் பார்வையிட்டனர். எங்களுக்கான இழப்பீடுகளை அவர்கள் மிக விரைவில் பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என விவசாயிகள் தெரிவித்தனர். (எ)

# டெங்கு கட்டுப்பாடு தொடர்பில் மூதூரில் அதிகாரிகள் ஆராய்வு

திருகோணமலை, டிசெ. 07

திருகோணமலை மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

அண்மையில் ஏற்பட்ட மழை - வெள்ளத்தால் டெங்கு நோய் பரவுவதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதோடு இதுவரை மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 125 டெங்கு நோயாளிகள் இணங்காணப்பட்டிருந்த பின்னணியில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகைதீன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அழித்தல், பிளாஸ்ரிக் பொருட்களை அகற்றுதல், டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர், மூதூர் பிரதேச சபையின் செயலாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

# இந்தியாவின் கீதா அமிர்தானந்த ஜியும் 5 மாதாஜிகளும் காரைதீவுக்கு வருகை

காரைதீவு, டிசெ. 07

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த பகவத்கீதையை உலகெலாம் எடுத்துச் செல்லும் கீதா அமிர்தானந்த ஜியும் மற்றும் ஐந்து மாதாஜிகளும் நேற்று வெள்ளிக்கிழமை காரைதீவுக்கு வருகை தந்தனர்.

இந்தியாவின் திருநெல்வேலி மதுரை சாரதா ஆச்சிரம சந்நியாசிகளான சண்முக பிரியாம்பா, சுதாகர பிரியாம்பா, நீலகண்ட பிரியாம்பா, சதாசிவ பிரியாம்பா, துர்க்கா பிரியாம்பா ஆகிய ஐந்து மாதாஜிகள், கீதா அமிர்தானந்த ஜியுடன் வருகை தந்தனர். மேலும் இந்தியா தமிழ்நாட்டுச் சேர்ந்த 20 கீதா அன்பர்களும் இந்தப் பயணத்தில் இணைந்திருந்தனர்.

முன்னதாக காரைதீவு சிறீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் இவர்களை வரவேற்று விசேட பூஜை நடைபெற்றது. அதன் பின்னர் ஒன்று கூடல் நடைபெற்றது .

பின்பு முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மணிமண்டப வளாகத்துக்கு வருகை தந்தனர்.

அங்கு விசேட பூஜையும் தொடர்ந்து மணிமண்டபத்திலே ஒன்று கூடலும் பணிமன்ற ஆலோசகர் வி. ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவின் ஹமா நகரையும் கைப்பற்றியது கிளர்ச்சி படை

## இராணுவம் வெளியேற்றம், ஜனாதிபதிக்கு நெருக்கடி

பெய்ரூட், டிசெ. 07

**சிரியாவின் ஹமா நகரையும் கிளர்ச்சிப் படையினர் கைப்பற்றினர். இதனால், அங்கிருந்து இராணுவம் வெளியேறியது. இது ஜனாதிபதி பஷார் ஆசாத்துக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.**

சிரியாவில் உள்நாட்டுப் போர் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. அரசுப் படைகளின் வசமுள்ள பகுதிகளை கைப்பற்றும் நோக்கில் கிளர்ச்சிப் படைகள் முன்னேறி வருகின்றன. சமீபத்தில் தொடர் தாக்குதலுக்குப் பிறகு வர்த்தக மையமான அலெப்போ நகரை கிளர்ச்சிப் படை கைப்பற்றியது.

இந்தத் தாக்குதலை ஹயாத் தஹ்ரிர் அல் - ஷாம் மற்றும் சிரிய தேசிய இராணுவம் எனப்படும் துருக்கி ஆதரவு போராளிகள் குழுவும் வழிநடத்துகின்றன. இந்தக் குழுவினரின் திடீர் தாக்குதலால் சிரிய இராணுவம் நிலைகுலைந்துள்ளது.

2016இல் அலெப்போ நகரம் கிளர்ச்சிப் படைகள் வசம் இருந்தது. அப்போது, சிரியா அரசுக்கு ஆதரவாகவுள்ள ரஷ்யா, அதிரடியாக வான்வழித் தாக்குதல் நடத்தி அந்த நகரத்தை மீட்டுக் கொடுத்தது. ரஷ்யா, ஈரான் மற்றும் ஈரானின் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லா மற்றும் பிற போராளிக் குழுக்கள் தலையிட்டு, ஆசாத்தின் அரசுக்கு ஆதரவாக இருந்தன. இதனால் அசாத் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் நீடிக்கிறார். அதன்பின்னர் முதல் முறையாக கிளர்ச்சிப் படைகள் தாக்குதல் நடத்தி அலெப்போவை கைப்பற்றியிருக்கிறது.

அலெப்போவைத் தொடர்ந்து இத்லிப் நகரை குறிவைத்து கிளர்ச்சிப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அரசு படைகளின் வசமுள்ள டமாஸ்கஸ் நகரையும் குறிவைத்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், அரசு படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஹமா நகருக்குள் கிளர்ச்சிப் படைகள் நுழைந்தன. இராணுவத்தின் பாதுகாப்பு அரணை உடைத்து முன்னேறினர். நகருக்குள் நுழைந்துவிட்டதாக கிளர்ச்சிப் படைகள் அறிவித்ததையடுத்து, ஹமா நகரில் இருந்த இராணுவத்தினர் திரும்பப் பெறப்பட்டனர். அவர்கள் பின்வாங்கி ஹமா நகருக்கு வெளியில் உள்ள மக்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ)

# ஆஸியில் யூதவழிபாட்டுத் தலம் அதிகாலையில் தீக்கிரையானது



மெல்பேர்ண், டிசெ. 07

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரிலுள்ள யூதர்களின் வழிபாட்டுத் தலத்துக்கு இனந்தெரியாதவர்கள் தீ வைத்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தீயணைப்பு படையினர் அந்தப் பகுதிக்குச் சென்றவேளை யூதர்களின் வழிபாட்டு தலம் முற்றாக எரிந்த நிலையில் காணப்பட்டது.

அதிகாலை வேளையில் வழிபாட்டுக்காக சிலர் யூத வழிபாட்டுத் தலத்துக்குள் காணப்பட்டவேளை தீ மூட்டப்பட்டது.

பெற்றோல் குண்டு வீசப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது சமூகத்தில் பகைமை உணர்வை ஏற்படுத் துவதற்காக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை என்று அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அல்பெனிஸ் தெரிவித்தார். (எ)

# கலிபோர்னியாவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## ரிக்டரில் 7. 0 ஆக பதிவு

கலிபோர்னியா, டிசெ. 07

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 7. 0 ஆக பதிவானது. இதனால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும் அது சற்று நேரத்தில் விலக்கிக் கொள்ளப்பட்டது.

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள வடக்கு பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. கலிபோர்னியாவின் கடலோர பகுதியான கேப் மெண்டோசினா பகுதியில் இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் சற்று அதிகமாக உணரப்பட்டது. இதனையடுத்து, அப்பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால், மக்கள் பீதியடைந்தனர். கடலோர பகுதிகளிலுள்ள மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். எனினும், சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

முன்னதாக நிலநடுக்கத்தால் வீடுகளில் இருந்த பொருட்கள் அதிர்ந்தன. இது தொடர்பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றன.

மக்களுக்குத் தேவையான உதவிகள் செய்ய அவசர குழுவினர் நிலநடுக்கம் உணரப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கலிபோர்னியா மாகாண அதிகாரிகள் கூறினர்.

# ஆன்மீகமும் அரசியலும் ஒன்றாக கலந்து விட்டது

## மதுரை ஆதீனம் மகிழ்ச்சி



மயிலாடுதுறை, டிசெ. 07

தமிழகத்தில் ஆன்மீகமும் அரசியலும் ஒன்றாக கலந்து விட்டது என்று மதுரை ஆதீன குருமுதல்வர் ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் தெரிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான அபிராமி அம்மை உடனாகிய அமிர்தகடேஸ்வரர் கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் வெள்ளி ரத தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"தமிழகத்தில் ஆன்மீகமும் அரசியலும் ஒன்றாக கலந்து விட்டது. ஆதீனங்களில் பொற்கால அருள் ஆட்சி நடத்தும் தருமபுரம் ஆதீனத்துக்கு நான் அடிமை. 40 ஆண்டுகளுக்கு பிறகு இந்த கோவிலுக்கு வந்துள்ளேன். அமைச்சர் பெயர் சேகர்பாபு, என்னுடைய பழைய பெயர் பகவதிபாபு. ஆதீனங்களை ஒன்று கூட்டிய பெருமை அமைச்சருக்குத்தான் சேரும்.

சிறப்பான முறையில் கோவில்களுக்கு அமைச்சர் திருப்பணிகள் செய்து வருகிறார். ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்று அண்ணா சொன்னதை சேகர்பாபு செய்து காட்டியுள்ளார். அவர் நீண்ட காலம் வாழ வேண்டும். இந்த ஆட்சி வளர வேண்டும். மத்தியில் நரேந்திர மோடி ஆட்சி வேண்டும். மாநிலத்தில் தி. மு. க. ஆட்சி வேண்டும்"- என்றார். (எ)

# தொலைபேசியிலும் எச்சரிக்கை வாசகம்

## ஸ்பெயின் அரசாங்கம் முயற்சி

மட்ரிட், டிசெ. 07

கையடக்க தொலைபேசியிலும் உடல் நலம் குறித்த எச்சரிக்கை வாசகத்தை இடம்பெற செய்ய ஸ்பெயின் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அரசுக் குழுவின் பரிந்துரைப்படி விரைவில் இந்த வாசகம் தொலைபேசிகளில் இடம்பெறும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அதிநவீன கையடக்க தொலைபேசி பாவனை மனநலன், உடல்நலம், தூக்கம், உறவு முறை என அனைத்தையும் வயது வித்தியாசமின்றி பாழ்படுத்துகிறது. இதைக் கருத்தில் கொண்ட ஐரோப்பிய தேசமான ஸ்பெயின் இந்த துணிச்சலான முடிவை எடுத்துள்ளது. அதாவது சிகரெட் போலவே தொலைபேசியிலும் எச்சரிக்கை வாசகத்தை இடம்பெற செய்ய முடிவு செய்துள்ளது.

ஸ்பெயின் அரசு நியமித்த வல்லுநர் குழு தாக்கல் செய்துள்ள 250 பக்க ஆய்வறிக்கையில் இது முன்மொழியப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை யில் டிஜிற்றல் சாதனங்களை சிறுவர்கள் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவது சார்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# "அரசு அதிகாரத்தை எலான் மஸ்க் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்"

நியூயோர்க், டிசெ. 07

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் உடனான நட்புறவை பயன்படுத்தி தன் போட்டி நிறுவனங்கள் மீது அரசு அதிகாரத்தை எலான் மஸ்க் துஷ்பிரயோகம் செய்யமாட்டார் என்று தான் நம்புவதாக ஓபன் ஏஐ நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி சாம் ஆல்ட்மேன் தெரிவித்தார்.


தொழிலதிபர்கள் எலான் மஸ்க் மற்றும் விவேக் இராமசாமி ஆகியோர் செயல்திறன் துறையை தலைமை தாங்கி வழிநடத்துவார்கள் என்று ட்ரம்ப் அறிவித்திருந்தார். இந்த நிலையில், நியூயோர்க்கில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் சாம் ஆல்ட்மேன் உரையாற்றுகையில்,

"எலான் மஸ்க் தனது பணியை சரியாக செய்வார் என்று நம்புகிறேன். சொந்த தொழில் ஆதாயத்துக்காகவும், போட்டியாளர்களை பின்னுக்குத் தள்ளவும் அரசியல் அதிகாரத்தை அமெரிக்கர்கள் பயன்படுத்த மாட்டார்கள்.

அந்த வகையில் மஸ்க் அதை செய்ய மாட்டார்"என ஆல்ட்மேன் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 180 ஓட்டங்களுக்கு சுருண்டது இந்தியா இரண்டாவது டெஸ்டில் ஆஸி ஆதிக்கம்




அடிலெய்ட், டிசெ. 07

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்ட் மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது.

பகலிரவு போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணிக்கு முதல் பந்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஸ்டார்க் வீசிய முதல் பந்திலேயே ஜெய்ஸ்வால் விக்கெட்டை பறிகொடுத்தார்.

இதனையடுத்து 2ஆவது விக்கெட்டுக்கு கை கோர்த்த கே. எல். ராகுல் - சுப்மன் கில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இவர்கள் இணைந்து 2ஆவது விக்கெட்டுக்கு 69 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் கே. எல். ராகுல் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய விராட் கோலி நிலைக்கவில்லை. அவர் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மூவரின் விக்கெட்களையும் ஸ்டார்க் வீழ்த்தினார். சிறிது நேரத்திலேயே கில்லும் 31 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இந்திய அணி மீண்டும் தடுமாறியது.

இதனையடுத்து களமிறங்கிய வீரர்களில் ரிஷப் பண்ட் 21 ஓட்டங்களிலும், ரோஹித் சர்மா 3 ஓட்டங்களிலும், அஸ்வின் 22 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதிக் கட்டத்தில் நிதிஷ் ரெட்டி அதிரடியாக விளையாடி அணிக்கு விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தார்.

முடிவில் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. நிதிஷ் ரெட்டி அதிகபட்சமாக 42 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலிய தரப்பில் ஸ்டார்க் 6 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

இதனையடுத்து அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸை தொடங்கி விளையாடி வருகிறது. (எ)

# இலங்கையை வீழ்த்தி இறுதிக்கு நுழைந்த இந்தியா

ஷார்ஜா, டிசெ.07

ஜூனியர் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கையை வீழ்த்தி இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. இதில் ஓர் அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை - இந்திய அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 173 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.இதையடுத்து 174 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா 7 விக்கெட்கள் வித்தியாசத்தில்



வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (எ)

# இரண்டாவது போட்டியிலும் தென்னாபிரிக்கா அசத்தல்

## இருவர் சதம், 358 ஓட்டங்கள் குவிப்பு

கெபேஹா, டிசெ. 07

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா தனது முதல் இன்னிங்ஸில் 358 ஓட்டங்கள் குவித்தது.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயனம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கெபேஹாவில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் தெம்பா பவுமா துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

இதன்படி முதலில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் தொடக்க வீரரான டோனி - டி - சோர்சி சந்தித்த முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். அடுத்ததாக களமிறங்கிய முந்தைய ஆட்டத்தின் ஹீரோ ஸ்டப்ஸ் 4 ஓட்டங்களிலும், மற்றொரு தொடக்க வீரரான எய்டன் மார்க்ரம் 20 ஓட்டங்களிலும் வீழ்ந்தனர்.

இந்த இக்கட்டான சூழலில் ஜோடி சேர்ந்த ரியான் ரிக்கல்டன் - பவுமா இணை சிறப்பாக விளையாடி அணியை மீட்டது. இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர். இதன் பின்பும் சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த பவுமா 78 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்ததாக வந்த பெடிங்காம் நிலைக்கவில்லை. 6 ஓட்டங்களில் வெளியேறினார்.

இதனையடுத்து ரிக்கல்டனுடன், கைல் வெர்ரைன் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் விளையாடினார். அபாரமாக விளையாடி சதமடித்த ரிக்கல்டன் 101 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து மார்க்கோ ஜான்சன் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அத்துடன் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.



தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்களை இழந்து 269 ஓட்டங்கள் குவித்தது. கைல் வெர்ரைன் 48 ஓட்டங்க ளுடன் களத்தில் இருந்தார். இலங்கை தரப்பில் லஹிரு குமார 3 விக்கெட்களும், அசித பெர்னாண்டோ 2 விக் கெட்களும் வீழ்த்தினர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் 2ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து விளையாடிய தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 358 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி சார்பில் கைல் வெர்ரைன் சதமடித்து அசத்தினார். அவர் 105 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதனையடுத்து இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகிறது. (எ)

# கடைசி போட்டியில் வென்றது சிம்பாவே

## ரி - 20 தொடர் பாகிஸ்தான் வசம்

புலவாயோ, டிசெ. 07

பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி ரி - 20 போட்டியில் சிம்பாவே 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இதில் முதல் 2 போட்டிகளில் பாகிஸ்தான் வெற்றி பெற்று 2 - 0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி விட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி போட்டி நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, சிம்பாவேயின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. இருப்பினும் அணித் தலைவர் சல்மான் ஆகா ஒரளவு சமாளித்து விளையாடி அணி, கௌரவமான நிலையை எட்ட உதவினார். இதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் பாகிஸ்தான் 132 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக சல்மான் 32 ஓட்டங்கள் எடுத்தார். சிம்பாவே தரப்பில் அதிகபட்சமாக முசரபானி 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 133 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய சிம்பாவே அணியும் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. ஆனால், தொடக்க வீரரான பிரையன் பென்னட் பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றியை நோக்கிப் பயணிக்க வைத்தார். இருப்பினும் கடைசி கட்டத்தில் அவர் ஆட்டமிழந்ததும் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக்கொண்டது.

சிம்பாவே அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அந்த ஓவரை ஜஹந்தத் கான் வீசினார். அந்த ஓவரின் முதல் 2 பந்துகளிலேயே 10 ஓட்டங்கள் அடித்த மபோசா 3ஆவது பந்தில் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்த பந்தில் தஷிங்கா முசெகிவாவும் ஆட்டமிழக்க ஆட்டத்தில் உச்சக்கட்ட பரபரப்பு ஏற்பட்டது. இருப்பினும் 5ஆவது பந்தை எதிர்கொண்ட யங்கரவா ஓர் ஓட்டம் அடித்து சிம்பாவே அணிக்கு திரில் வெற்றியை பெற்றுக்கொடுத்தார்.

முடிவில் 19. 5 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்த சிம்பாவே 133 ஓட்டங்கள் அடித்து 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பிரையன் பென்னட் 43 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரை பாகிஸ்தான் 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (எ)

# 86 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் நியூசிலாந்து தடுமாற்றம்

வெலிங்டன், டிசெ. 07

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 86 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நேற்றுத் தொடங்கியது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதன்படி தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 54. 4 ஓவர்களில் 280 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஹாரி புரூக் 123 ஓட்டங்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் நாதன் சுமித் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து ஆரம்பம் முதலே விக்கெட்களை பறிகொடுத்து தடுமாறியது. டெவான் கொன்வே 11 ஓட்டங்களிலும், லேதம் 17 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த வில்லியம்சன் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

முதல் நாள் முடிவில் நியூசிலாந்து 86 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகிறது. ரொம் பிளண்டெல் 7 ஓட்டங்களுடனும், வில்லியம் ஓரூர்க் ஓட்டம் எதுவுமின்றியும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து தரப்பில் பிரைடன் கார்ஸ் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இன்று 2ஆவது நாள் ஆட்டம் நடைபெறவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமைப்பு

வெற்றி பெற்றார்.

எதிர்க்கட்சி தரப்பில் காஸ் சிலிண்டர் சார்பில் தெரிவான தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவரும், ரோஹித அபேகுணவர்தன எம்.பியும் இந்தத் தேர்வில் பங்குபற்றாத நிலையில் சிறீதரன் வெற்றி பெற்றார். (அ)

## மனித உரிமை...

கோரிக்கைகளையும், ஆவணங்களையும் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசுகளுக்கும், ஐ.நா. சபைக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டம் அனுப்பி வைத்திருக்கிறது.

ஜொஹனஸ்பேர்க்கை தளமாகக் கொண்டு யஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கிவரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டமானது இலங்கையின் அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிரான தடைகள் மற்றும் விஸா அனுமதி தடைகள் தொடர்பான 60 க்கும் மேற்பட்ட கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன் உலகளாவிய சட்ட வரம்பெல்லையின் பிரகாரம் வழக்குப் பதிவுகளையும் கோரியிருக்கிறது.

மனித உரிமைகள் தினத்தையொட்டி (எதிர்வரும் 10 ஆம் திகதி) தயாரிக்கப்பட்டிருக்கும் இக்கோரிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள், நீதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடன் தொடர்புடைய கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க ஊழல் மோசடிகள் என்பன பற்றியவையாக இருக்கின்றன.

உள்நாட்டு யுத்தத்தின்போதும், அதற்குப் பின்னருமான காலப்பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், பலவந்தமான கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மனித குலத்துக்கு எதிரான மிகமோசமான மனித உரிமை மீறல்களும், நாட்டின் அரச கட்டமைப்புக்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பாரிய ஊழல்களும் இக்குற்றங்களில் அடங்குகின்றன.

அதுமாத்திரமன்றி இம்மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலான முறையற்ற தலையீடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் என்பனவும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, "கடந்த கால மீறல்கள் தொடர்பில் இற்றைவரை பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத நிலையில், கடந்தகால மற்றும் சமகால குற்றங்களை ஆவணப்படுத்தி, அவற்றுக்கான சான்றுகளைப் பகுப்பாய்வு செய்து, உண்மையைக் கண்டறிவதற்கு ஏதுவான சகல வழிமுறைகளையும் உரியவாறு பயன்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக பிரிட்டனின் தற்போதைய புதிய அரசாங்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று தடைகளை விதிக்கும் என எதிர்பார்க் கின்றோம்" எனத் தெரிவித்துள்ளார். (அ)

# 15ஆம் திகதி வரை கன மழைக்கான வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 07

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு தெற்காக இன்று காலை காற்று சுழற்சி உருவாகின்றது. இது இன்று இரவு அல்லது நாளை 08 ஆம் திகதி காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி முதலில் மேற்கு வடமேற்கு திசையாக நகர்ந்து பின்னர் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வங்காள விரிகுடாவில் இந்த தாழமுக்கம் வலுவடைவதற்கான கடல் மேற்பரப்பு வெப்பநிலை நிலவுகின்றது. நேற்று வங்காள விரிகுடாவில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை 29 பாகை செல்சியஸ் ஆக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் நாளை உருவாகும் காற்று சுழற்சி எதிர்வரும் 10 ஆம் திகதி அன்று இரவு ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் இது கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் இருந்து சற்று தொலைவாகவே கடற்பகுதியில் வடக்கு, வடமேற்கு திசையில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இதன் நகர்வு திசை மற்றும் வேகம் அதற்கு கிடைக்கும் மறைவெப்ப சக்தியைப் பொறுத்து மாற்றமடையலாம் என்பதனைக் கருத்தில் கொள்க.

ஆனால் இக் காற்றழுத்த தாழ்வு நிலையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 10 ஆம் திகதி இரவு முதல் 15 ஆம் திகதி வரை மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. சில இடங்களில் மிகக் கன மழைக்கும் வாய்ப்புள்ளது.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மண்ணீர்க் கொள்ளளவில் 97 வீதம் பூர்த்தியாகியுள்ளது. கடந்த நவம்பர் 28 அன்று 100 வீதமாக இருந்த இந்நிலைமை கடந்த சில நாட்களாக இருந்த வெப்பநிலையின் காரணமாக ஆவியாக்கத்தின் விளைவாக தற்போது 97 வீதமாக உள்ளது. ஆகவே சராசரியாக 30 மி.மீ. மழை கிடைத்தால் இது மீண்டும் 10 வீதத்தினை அடைந்துவிடும். ஆகவே அதன் பின்னர் கிடைக்கும் மழை தரை மேற்பரப்பில் தேங்கி மீண்டும் தாழ்வான பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்படலாம்.

அத்தோடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் குளங்களும் அவற்றின் முழுக் கொள்ளளவை எட்டியுள்ளதால் அவை சற்று கன மழை (30 மி.மீ. முதல் 50 மி.மீ. வரை) கிடைத்தாலே மீண்டும் வான் பாயத் தொடங்கும். ஆகவே குளங்களின் உபரி நீர் வெளியேற்றமும் சில இடங்களில் வெள்ள அனர்த்தத்தை உருவாக்கலாம். - எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## இடைக்கால...

கடந்த 03ஆம் திகதி பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கமைய, நேற்று முன் தினமும் நேற்றைய தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை விவாதம் நடைபெற்றது.

நேற்றைய தினம் விவாதம் முடிவடைந்ததும் குறித்த தீர்மானம் வாக் கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது. (அ)

## ஆற்றில்...

கொண்டிருந்த நிலையில் நீருக்குள் தவறி வீழ்ந்து மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த மற்றொரு நபர் சம்பவம் தொடர்பாக ஊர்மக்களுக்கு தெரியப்படுத்தினார். இதனையடுத்து குறித்த நபரை தேடும் பணி ஊர்மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட நேரமாக தேடுதல் இடம்பெற்றுவந்த நிலையில் சில மணிநேரங்களின் பின்னர் அவரது சடலம் நீருக்குள் இருந்து மீட்கப்பட்டது.

சம்பவத்தில் தரணிக்குளம் பகுதியைச் சேர்ந்த குரு என்ற இரு பிள்ளைகளின் தந்தையே சாவடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## நாணய...

கணக்கறிக்கையில் நீண்ட கால பொருளாதாரத் திட்டங்களை முன்வைக்க முடியாது. என்றாலும், வரவு-செலவுத் திட்டத்தில் நீண்ட கால இலக்குகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு முன்னோக்கிச் செல்வோம்.

நீண்ட காலத் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமும் ஒன்றும். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அத்திட்டத்தை நிறுத்த முடியாது. அவ்வாறு செய்தால் நாடு பின்னோக்கிச் செல்லும். அதனால் இத்திட்டத்தில் உள்ள குறைப்பாடுகளை நீக்கி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யவே எதிர்பார்க்கிறோம்.

நீண்ட கால பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர உற்பத்தி பொருளாதாரம் அதிகரிக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கித்தான் நாம் பயணிக்கிறோம். 12ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் மீண்டும் இதில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சி கோருகிறது. அதற்கு கால அவகாசம் போதுமானதாக இல்லை. அவ்வாறு செய்யவும் முடியாது.

ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் கடன் மறுசீரமைப்பு பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும். அடுத்த வருடம் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதில் எமக்கு சில இலக்குகள் உள்ளன. அதனால் இத்திட்டத்தை தொடர்ந்து [illegible] செய்ய முடியாது - என்றார். (அ)

## தான்...

செய்யவேண்டும் எனவும், தேசிய மக்கள் சக்தி, இது குறித்து நடவ டிக்கை எடுக்க வேண்டும் எனவும், மகிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## 2025இல்...

வழங்கும்போது அதில் பெருமளவிலான துணிகள் வீணடிக்கப்படுவதனால் குறித்த தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

## சிறுபான்மையின...

சிஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி போர் தலைமையிலான 13 பேரடங்கிய பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர், நாட்டின் சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு தேர்தலுக்கு முன்னரான பிரசார காலப்பகுதி, தேர்தல் தினத்தன்று நடைபெறும் செயன்முறைகள், தேர்தல் முடிவடைந்ததன் பின்னரான நிலைவரம் என்பவற்றைப் பரந்துபட்ட ரீதியில் கண்காணித்தனர்.

அக்கண்காணிப்பு நடவடிக்கைகளின் முடிவில் அவதானிக்கப்பட்ட விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கில் கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் டெனி போர், "இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் மிக அமைதியானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான முறையில் நடைபெற்று முடிந்திருக்கிறது. பெரும்பாலான வாக்காளர்களுக்கு விருப்பு வாக்களிப்பு செயன்முறை மற்றும் அதன் அவசியம் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லை. எதிர்வருங் காலங்களில் அவ்விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியமாகும்" என்று வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் தொடர்பான பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் 114 பக்கங்களைக்கொண்ட இறுதி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

"ஜனாதிபதித் தேர்தலுக்கான பின்னணியையும், சூழலையும் நிர்ணயிப்பதில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 'அரகலய' என அறியப்படும் மக்கள் எழுச்சிப் போராட்டம் மிகமுக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்தது. அப்போராட்டத்தின் விளைவாக அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய பதவி கவிழ்க்கப்பட்டு, அவரது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்வதற்கான ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டார்.

அதன்படி நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க உள்ளடங்கலாக 39 ஆண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இத்தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறத்தவறியதை அடுத்து, இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு, அதனடிப்படையில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.

இத்தேர்தலானது நம்பகமானதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான முறையில் நடாத்தப்பட்டதுடன், வாக்களிப்பு நிலையங்களுக்கு பெரும் எண்ணிக்கையில் திரண்டுவந்து வாக்களித்தமைக்காக மக்களையும் பாராட்டவேண்டும்" என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று தேர்தல் காலப்பகுதியில் அரச வளங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தமது இறுதி அறிக்கையில் கரிசனையை வெளிப்படுத்தியுள்ள பொதுநலவாய கண்காணிப்புக் குழு, தேர்தல் பிரசாரங்களுக்கு செலவிடப்படும் நிதி குறித்த கண்காணிப்பு செயன்முறையை மேலும் செயற்திறன் மிக்கதாக மாற்றியமைப்பதும், ஊடகங்களுக்கான ஒழுக்கநெறிக் கோவையை வலுப்படுத்துவதும் அவசியம் என வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை இலங்கையின் தேர்தல் செயன்முறையை மேலும் வலுப்படுத்துவதை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வெளியகத்தரப்பினரால் வழங்கப்படும் நன்கொடைகள் மற்றும் தனியார் நிதியளிப்பு என்பவற்றுக்கான மட்டுப்பாடொன்றை விதித்தல், ஊடக விளம்பரங்களுக்காக செலவிடப்படும் நிதியை மட்டுப்படுத்துவதுடன், இவ்விடயத்தில் ஊடகங்களுக்கான வரையறைகளை நிர்ணயித்தல், தேர்தல் சார்ந்த குற்றங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கல் ஆகியவற்றுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்கால மோதல்களைத் தவிர்க்கும் வகையில் சிறுபான்மையின மக்களின் கருத்துக்கள் அர்த்தமுள்ள விதத்தில் உள்வாங்கப்படுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேலும் வலுப்படுத்தவேண்டும் என்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு அதன் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஒருவருக்கு 5 கிலோ அரிசி! நேற்று முதல் நடைமுறைக்கு

கொழும்பு, டிசெ. 07

நேற்று முதல் வெளி மாகாணங்களில் உள்ள வாடிக்கையாளர்கள் லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நாட்டு அரிசி மற்றும் தேங்காய்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

கொழும்பு உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையங்களுக்கு நேற்று முன்தினம் அரிசி மற்றும் தேங்காய் விநியோகம் செய்யப்பட்டதாக அதன் தலைவர் சமித்த பெரேரா தெரிவித்தார்.

இதன்படி, ஒரு வாடிக்கையாளருக்கு 05 கிலோ நாட்டு அரிசி மற்றும் 03 தேங்காய்களை ஒரே நேரத்தில் வழங்க லங்கா சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# அமெ. உதவிச் செயலாளர் விஜித ஹேரத்துடன் பேச்சு



கொழும்பு, டிசெ. 07

தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்தார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கதில் பதிவிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்,

இலங்கையின் மீட்புக்கு முக்கிய பங்காற்றிய யு.எஸ். எயிட் மற்றும் அமெரிக்க திறைசேரி திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, இலங்கையின் வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பை மேற்கொண்டார்.

இதன்போது, இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் பொதுவான முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம். மேலும், இலங்கையின் மக்கள் நலனுக்காக பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை ஆதரிக்கத் தகுந்த திட்டங்கள், திறன் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் நாம் இணைந்து செயல்படக்கூடிய வழிகளை இதன்போது ஆராய்ந்தோம் என குறிப்பிட்டுள்ளார்.

# வயோதிபப் பெண் சுட்டுப் படுகொலை!

## அநுராதபுரத்தில் நடந்த பயங்கரம்

கொழும்பு, டிசெ. 07

அநுராதபுரம் - பதவிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியொன்றில் நேற்று முன் தினம் இரவு பெண் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், வீட்டில் இருந்த பெண்ணை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பெண், பதவிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

போகஹவெவ பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய வயது முதிர்ந்த பெண்ணே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் மற்றும் சந்தேகநபர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதவிய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## ரஷ்ய படையில் தமிழ் இளைஞர்கள்:

# சிறீதரன் எம்.பியின் உரையால் சபையில் சூடுபிடித்த விவாதம்

கொழும்பு, டிசெ. 07

**இலங்கையில் இருந்து ரஷ்ய இராணுவத்துக்கு 3 தமிழ் இளைஞர்கள் இணைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், முகவர்களால் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டவர்களை மீண்டும் நாட்டுக்கு மீட்டெடுக்குமாறு சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.

உடனே இதற்கு விளக்கமளித்த சபை முதல்வர் பிமல் ரத்னாயக்க, இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஆராய்வார் என தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, குறுக்கிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, இது தொடர்பான கேள்வி வடக்கில் மட்டுமல்லாது நாடு முழுவதும் இருப்பதாக குறிப்பிட்டார்.

மேலும், நீண்ட காலமாக விவாதத்திற்கு உட்படும் இது போன்ற கருத்துக்கள் கடந்த அரசாங்கத்திலும் ஆராயப்பட்டதாக தெரிவித்தார்.

இதனையடுத்து, மீண்டும் குறுக்கிட்ட பிமல் ரத்னாயக்க, இந்த பிரச்னைக்கான தீர்வு காணும் பொறுப்பை நாம் வெளிவிவகார அமைச்சரிடம் ஒப்படைத்ததாகவும் மீண்டும் இதனை ஒரு விவாதமாக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்றத்தில் எல்லோரும் சமம் எனவும் யாரும் பெரியவர் அல்லர் எனவும் கூறிய அவர், தன்னை பெரியவர் என்று எவரேனும் நினைத்தால் அவர் சபைக்கு தகுந்தாற் போல் தம்மை தாழ்த்திக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார். (அ)

# வெளியில் இயங்கும் அலுவலகங்கள் அரச கட்டடங்களுக்குள் இடமாற்றம்!

## சபையில் அமைச்சர் ஹந்துன்நெத்தி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

அதிக வாடகை செலுத்தி பல்வேறு தனியார் கட்டடங்களில் இயங்கும் அரச நிறுவனங்களை, அரசுக்கு சொந்தமான கட்டடங்களுக்குள் மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை இயங்கும் அலுவலகத்தின் மாதாந்த வாடகை 50 இலட்சம் எனச் சுட்டிக்காட்டிய அவர், இதற்கு மேலதிகமாக வர்த்தக அமைச்சின் மாத வாடகை 65 இலட்சம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இடைக்கால நியமக் கணக்கு மீதான விவாதத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் 24 பேரும் விலையுயர்ந்த வீடுகளுக்குச் செல்லாமல் மின்சாரக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம் போன்றவற்றைக் கூட சேமித்து வருவதாகவும் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். (அ)

# அரசாங்க வேலைவாய்ப்புக்களில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிப்பு

## சுட்டிக்காட்டிய இலங்கையின் முதல் மாற்றுத்திறனாளி எம்.பி.

கொழும்பு, டிசெ. 07

மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்தும் சொற் பிரயோகங்களை பாராளுமன்றில் பயன்படுத்துவதை நிறுத்துங்கள் என இலங்கையின் முதல் மாற்றுத்திறனாளியான பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள 17 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் சார்பில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கவுள்ளேன்.

பலர் மாற்றுத்திறனாளிகள் பாராளுமன்றிற்கு வந்து என்ன செய்ய போகின்றனர் என்று கேட்கின்றார்கள். அதனை சவாலாக ஏற்று எனது பணியை தொடர்வேன்.

மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்தும் சொற் பிரயோகங்களை பாராளுமன்றில் பயன்படுத்துவதை நிறுத்துங்கள்.

மாற்றுத்திறனாளிகள் அரச வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்படுகின்றனர். வேலைவவாய்ப்பில் 3 சதவீத மாற்றுதிறனாளிகள் உள்வாங்கப்படவேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் ஐ.நாவில் புதிய சட்டம் இயற்றப்படவேண்டும்.

மாற்று திறனாளிகளுக்கான பொருட்களுக்கு வரிக் குறைப்பு வேண்டும் - என்றார். (அ)

# ஒழித்து வைத்த அரிசி எங்கே? சபையில் கேட்ட எதிரணி எம்.பி.

## பகிரங்கப்படுத்திய வர்த்தக அமைச்சர்!

கொழும்பு, டிசெ. 07

அதிகார பலத்தை பயன்படுத்தி, ஒழித்து வைக்கப்பட்டுள்ள அரிசியை வெளிக்கொண்டுவந்து அரிசிப் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா கோரிக்கை விடுத்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது அரிசிப் பற்றாக்குறை தொடர்பில் ஹர்சன ராஜகருணா வர்த்தக அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நத்தார் பண்டிகை காலப்பகுதியில் முக்கிய பிரச்னையாகக் காணப்படுவது அரிசிப் பற்றாக்குறை. இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு அரிசி ஆலை உரிமையாளர்களோடு கலந்துரையடியதாக கூறினீர்கள்.தற்போது வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அரிசி ஒழித்து வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். ஆகவே அது தொடர்பாக சட்டத்தை அமுலாக்கம் செய்யவேண்டிய பொறுப்பு உங்களிடம் காணப்படுகிறது.

நீங்கள் உங்களுடைய அதிகார பலத்தை பயன்படுத்தி ஒழித்து வைக்கப்பட்டுள்ள அரிசியை வெளிக்கொண்டுவந்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கமுடியுமா என கேட்க விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க,

நாங்கள் பாரிய மற்றும் சிறிய அரிசி ஆலை உரிமையாளர்களோடு பேசியிருக்கிறோம். பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களிடம் அரிசி காணப்படுகிறது. அந்த உரிமையாளர்கள் அரிசியை வழங்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைய தினமும் அரிசி விடுவிக்கப்பட்டிருக்கின்றது. நாளாந்தம் சதொச ஊடாக அரிசியை விநியோகிப்ப தற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். சந்தைக்கு வழங்குமாறும் கூறியிருக்கின்றோம்.

அதிகபட்சம் நாடு அரிசி 220 ரூபாவுக்கும் சம்பா அரிசி 210 ரூபாவுக்கும் வழங்குமாறும் அறிவித்திருக்கிறோம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org